**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 21 ஜூன் 2017

Good Food, Good Life

## இந்த ஆண்டு ஜனாதிபதி வெற்றிக்கிண்ண ரக்பி இறுதிப்போட்டியில் "16th MAN" ஆகும் வாய்ப்பினை மைலோ தனது ரக்பி ரசிகர்களுக்கு வழங்கவுள்ளது

*ரசிகர்கள் உலகின் எப்பகுதியில் இருந்தும் தாம் விரும்பும் அணிகளை உற்சாகப்படுத்துவதற்கு புதுமையான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது*

மைலோ வழங்கும் ஜனாதிபதி வெற்றிக்கிண்ண ரக்பி நொக்-அவுட் சுற்றுப்போட்டியின் மாபெரும் இறுதிப் போட்டியை மேலும் விறுவிறுப்பாக்கும் வகையில், '16th MAN' என்ற புதுமையான வழியில் உற்சாகப்படுத்தும் ஒரு வாய்ப்பினை மைலோ தனது ரசிகர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது. மாபெரும் இறுதி ஆட்டத்தை மைதானத்தில் நேரடியாகக் கண்டுகளிக்கும் வாய்ப்பினைக் கொண்டிராத ரசிகர்கள், தற்போது St. Joseph's அல்லது இசிப்பத்தன ஆகியவற்றில் தாம் விரும்பும் அணிக்கென பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி, முதலாவது அழைப்பு தொனி கேட்டவுடன், அழைப்பைத் துண்டித்து 'missed call' ஒன்றை ஏற்படுத்த முடியும். இதன் மூலமாக தாம் விரும்பும் அணியை உற்சாகப்படுத்தும் வகையில் தனித்துவமான உற்சாகமூட்டல் கோசமொன்று ஒலிபெருக்கியில் ஒலிபரப்பு செய்யப்படும்.

மைதானத்தின் நான்கு மூலைகளிலும் வைக்கப்படவுள்ள தன்னியக்க ஒலிபெருக்கிகள் மூலமாக உற்சாக கோசங்கள் ஒலிபரப்பு செய்யப்படவுள்ளன. அதிகமான 'missed calls' களை அனுப்பி வைப்பதால் உற்சாக கோசத்தின் சத்தமும் உரத்த தொனியாக மாறும். St. Joseph's அணியின் ரசிகர்களுக்கு 0 720 760 160 என்ற தொலைபேசி இலக்கமும், இசிப்பத்தன அணியின் ரசிகர்களுக்கு 0 720 760 161 என்ற தொலைபேசி இலக்கமும் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

மைலோ கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் பாடசாலை மட்ட விளையாட்டு நிகழ்வுகளின் இதய நாடியாகச் செயற்பட்டு வந்துள்ளது. மைலோ ரசிகர்கள் விளையாட்டு வீரர்களுக்கு ஆதரவை வழங்கி, உற்சாகப்படுத்துவதில் ஒரு மாபெரும் சக்தியாக விளங்கி வருகின்றனர். விளையாட்டிலிருந்து பிரிக்க முடியாத ஒரு அங்கமாக அவர்கள் மாறியுள்ளனர். அவர்கள் தமது ஆதரவையும், தீவிரமான உற்சாக கோசத்தையும், மைதானத்திற்கு வெளியிலிருந்து உரத்து கூச்சலிட்டும் விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தி ஆட்டத்தின் உயிர்நாடியாகத் திகழ்கின்றனர். தனது ரசிகர்களுக்கு வழங்கும் ஒரு பிரதியுபகாரமாக, அவர்கள் நேரடியாக கண்டுகளிக்க வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும், எந்த இடத்தில் இருந்து கொண்டும். தமது அணிகளுக்கு ஆதரவளித்து, 16th MAN ஆக மாறுவதற்கான வாய்ப்பை மைலோ இதன் மூலமாக அவர்களுக்கு வழங்கியுள்ளது.

அணிகளை உற்சாகப்படுத்துவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இந்த தொலைபேசி இலக்கங்கள், மைலோ ஜனாதிபதி வெற்றிக்கிண்ண ரக்பி நொக்-அவுட் சுற்றுப்போட்டியின் மாபெரும் இறுதியாட்டம் இடம்பெறவுள்ள 2017 ஜூன் 24 ஆம் திகதியன்று பி.ப 6.00 மணி முதல் செயற்பட ஆரம்பிக்கும். இது தொடர்பான மேலதிக தகவல்களை #MILO16thMan என்ற hashtag இன் கீழ் Facebook பக்கத்தின் மூலமாக அறிந்துகொள்ள முடிவதுடன், ரசிகர்கள் தமக்கு விருப்பமான அணி மற்றும் அவற்றின் தீவிரமான ரசிகர்கள் தொடர்பான வீடியோ பதிவுகளை பார்க்க முடிவதுடன், அவர்கள் உலகின் எப்பகுதியில் இருந்தாலும் தமக்கு விருப்பமான அணிக்கு ஆதரவை வழங்கி உற்சாகப்படுத்துவதற்கு அந்த பிரத்தியேகமான தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் மிகவும் பிரபலமான ஊட்டச்சத்து நிறைந்த பான வகை வர்த்தகநாமமான மைலோ, மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அடிமட்டத்தில் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தி வந்துள்ளது. விளையாட்டில் புதுமைகளை புகுத்தி, விளையாட்டு வீரர்கள், அவர்களது பாடசாலைகள், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் ரசிகர்களுக்கு விளையாட்டில் மேம்பட்ட வழியில் ஈடுபாட்டைக் காண்பிக்கும் வழிமுறைகளை அறிமுகப்படுத்தி, அனைவருக்கும் பயன்மிக்க, சிறந்த அனுபவத்தை வழங்குவதில் முன்னணியில் திகழ்ந்து வந்துள்ளது. நுகர்வோர் தமது இலக்கினை வெற்றிகரமாக அடைவதற்கு உதவுவதற்கு அவர்களை ஊக்குவிக்கின்ற இந்த

வர்த்தகநாமம், விளையாட்டு மற்றும் உடல் நலன் ஆகியவற்றின் சாதகமான பரிமாணங்களை ஊக்குவித்து வருகின்றது.